# தெரிவு செய்யப்பட்ட பொதுச் செயற்பாடுகளின்போதும்/ பொது இடங்களிலும் கோவிட்-19 கட்டுப்பாடு மற்றும் முற்தடுப்பினை மேற்கொள்வதற்கான அறிவுறுத்தல்கள் (தமிழ்)

வேறுபட்ட பொதுக் கருமங்கள் மற்றும் வேலைத் தளங்களுக்கான அறிவுறுத்தல் குறிப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றுள் சுற்றுலாத்துறை, பேரங்காடிகள், நிகழ்ச்சிகள் முகாமைத்துவம் போன்றவற்றிற்கு பல அறிவுறுத்தல்கள் அவசியப்படும்.

இவ்வறிவுறுத்தல்கள் அனைத்தும் சுகாதார அமைச்சின் அனுமதியை பெற்ற பின்னரே மீண்டும் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும். (முழுமையாக/தெரிவு செய்யப்பட்ட)

ஒவ்வொரு அறிவுறுத்தல்களும் சுகாதார அமைச்சின், சுகாதார பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்படும். மற்றும் இவை அனைத்து ஸ்தாபனங்கள்/உரிமையாளர்கள்/பொறுப்பதிகாரிகளினால் COVID 19 பரவலை தடுப்பதற்காக பின்பற்றப்படல் வேண்டும்.

தொழில்சார் வேலைத்தளங்கள் சம்பந்தமான மேலதிக தகவல்களுக்கு பின்வரும் இணையதளத்தை அணுகவும்.

http://eohfs.health.gov.lk/occupational/index.php?option=com_content&view=article&id=61&Itemid=208&lang=en

නව ජීවන රටාවක් උදෙසා
புதிய வாழ்க்கை முறையை நோக்கி
TOWARDS A NEW NORMAL

MINISTRY OF HEALTH AND INDIGENOUS MEDICAL SERVICES

World Health Organization Sri Lanka

GOVERNMENT MEDICAL OFFICERS ASSOCIATION

SRI JAYAWARDENEPURA KOTTE MUNICIPAL COUNCIL

## 26. தொழிற்சாலைகள்

**விளக்கம் -** நாட்டில் தற்போது எழுந்துள்ள சூழ்நிலை காரணமாக, சுகாதார மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளை இறுக்கமாக கடைப்பிடிப்பதன் மூலம் பாரிய மற்றும் நடுத்தரத் தொழிலகங்கள் கட்டம் கட்டங்களாக திறக்கப்படலாம்.

**பிரத்தியேக தகவல்கள்/வழிகாட்டல்கள்**
**இயக்குனர் / உரிமையாளர் / வேலை வழங்குபவர்**

- அரசு /சுகாதார அமைச்சின் அறிவுறுத்தல்களைக் கடைப்பிடித்து, தொழிலகத்திற்கான கோவிட் -19 னை எதிர்கொள்வதற்கான திட்டம் ஒன்றினைத் தயாரிக்கவும். சுகாதார மற்றும் காப்பு (Health & Safety) அதிகாரிகளை நியமிக்கவும்.
- பிரதேச சுகாதார அதிகாரிகளது முக்கியமான தொடர்பு இலக்கங்கள் மற்றும் தேசிய கோவிட் தடுப்பு வெவ்வழி (Hot lines) இலக்கங்களது பட்டியலினைப் பேணுங்கள்.
- தொழிலாளர்களது வதிவிடம் மற்றும் அவர்களது தொடர்பு விவரங்களைச் சரிபார்த்துக் கொள்க. பட்டியலைப் பேணவும்.
- ஊழியர்களின் உடல்நலம் குறித்து தினமும் விசாரிக்கும் முறையை பின்பற்றுங்கள் (காய்ச்சல் மற்றும் இருமல் / சளி போன்ற சுவாச அறிகுறிகளைக் கேளுங்கள்) மற்றும் உடல்நிலை சரியில்லாதவர்களுக்கு சரியான நேரத்தில் மருத்துவ ஆலோசனையைப் பெற வழிகாட்டவும்
- உங்களது பிரதேசம் உள்ள அபாயநிலை வகைப்படுத்தல் நிலையின் அடிப்படையில், ஒரு தடவையில் 50 வீதம் அல்லது அதற்கும் குறைவான எண்ணிக்கையான பணியாளர்களுடன் கடமைச் சுற்றொழுங்கின்படி (Roster) வேலைகளை மேற்கொள்வதற்கான ஆயத்தங்களை மேற்கொள்க.
- கடமையில் இருக்கும்போது பணியாளர்கள் அனைவரும் முகக்கவசம் அணிவதனைக் கட்டாயமாக்குங்கள்.
- பணியாளர்களுக்கு நுழைவாயில், மலசலகூடங்கள் மற்றும் உணவு அருந்தும் பகுதிகள் ஆகிய இடங்களில் கை கழுவும் வசதிகள் தயாராக இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- வேலை நேரத்தில் அடிக்கடி சவர்க்காரம் தண்ணீரினை உபயோகித்து அவர்களது கைகளை ஆகக் குறைந்தது 20 வினாடிகளுக்கு கழுவிக்கொள்ளுமாறு ஊழியர்களை ஊக்குவிக்கவும்.
- முடியுமானால் அனைத்து ஊழியர்கள் மற்றும் விருந்தாளிகளின் உடல் வெப்பநிலையை நுழைவாயிலில் வைத்துப் பரிசோதிக்க வேண்டும்.
- அடிக்கடி தொடுகைக்குள்ளாகும் மேற்பரப்புகளான மேசைமேற்பரப்புகள், எண்ணகங்களது மேற்பரப்புகள், கதவுக் கைப்பிடிகள் மற்றும் கைபிடிச் சட்டங்கள் (Railings) அடிக்கடி சுத்தம் செய்யப்பட வேண்டும்.
- ஆட்களுக்கு இடையே குறைந்தது ஒரு மீற்றர் இடைவெளியைப் பேணுவதற்கு ஊக்குவிக்கவும்.
- பொருத்தமான உடல் இடைவெளியினைப் பேணுவதற்கு வசதியாகத் தகுந்த இடைவெளியில் பணியிட மேசைகளை ஒழுங்குபடுத்துங்கள்.
- தொழிலகத்தில் அனைத்து விதமான கூட்டங்கள், கொண்டாட்டங்கள் மற்றும் நிகழ்வுகளையும் நிறுத்தி வைக்கவும்.
- தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி கூட்டங்களை நடத்துங்கள் (உதாரணம். காணொளித் தொலைத்தொடர்புமகாநாட்டு வசதிகள்).
- பணியாளர்கள் சிறிய குழுக்களாக வெவ்வேறு நேரங்களில் தேநீர் மற்றும் உணவு இடைவேளையை பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்யுங்கள்.
- கோவிட் -19 ஆனது தொற்றாது தடுக்கும் முறைமைகள் குறித்து குறித்து அனைத்து ஊழியர்களுக்கும் பயிற்சி அளிக்கவும் (உதாரணம்: எப்படி முகக்கவசத்தைச் சரியாக அணிவது, கை கழுவும் உத்தி மற்றும் சுவாச நற்பழக்கங்கள்).
- ஊழியர்களுக்கு சுவாச நோய் அறிகுறிகள் இருந்தால் அவர்களை வீட்டிலேயே இருக்க ஊக்குவிக்கவும். வேலைத்தலத்தில் அவர்களுக்கு அந்த நோய் அறிகுகள் தென்படின் அவர்களை வீட்டிற்குச் செல்லும்படி கூறுங்கள்.

- வழங்கப்பட்ட உத்தரவாத படிவத்தை நீங்கள் நிரப்ப வேண்டும்: இது கொடுக்கப்பட்ட வழிமுறைகளுக்கு இணங்குவதைக் குறிக்கிறது. உத்தரவாத படிவத்தின் அசல் சுகாதார மருத்துவ உத்தியோகஸ்தரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதன் நகலை அரச உள்ளூர் அதிகார சபைக்கு (நகராட்சி மன்றம் / நகர சபை / பிரதேசிய சபை ) அனுப்ப வேண்டும் மற்றும் மற்றைய நகலை நீங்கள் வைத்திருக்க வேண்டும். மேலே உள்ள வழிகாட்டுதல்கள் கண்டிப்பாக கடைபிடிக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவது அமைப்பு அல்லது வளாக உரிமையாளரின் / வேலை வழங்குனரின் / மேலாளரின் பொறுப்பு ஆகும்.

**பணியாளர்கள்**

- உங்களுக்கு லேசான சுவாச நோய் அறிகுறிகள் இருந்தால் கூட வீட்டிலேயே இருங்கள்.
- எப்போதும் முகக்கவசத்தைச் சரியாக அணியுங்கள்.
- பிறரிடம் இருந்து குறைந்தது ஒரு மீற்றர் இடைவெளியைப் பேணவும்.
- முகமன் தெரிவிப்பதற்கு ஆட்களைத் தொடாமல் வாழ்த்தும் முறைகளைப் பயன்படுத்துக.
- அடிக்கடி சவர்க்காரம் மற்றும் தண்ணீரை உபயோகித்து உங்கள் கைகளை ஆகக் குறைந்தது 20 வினாடிகளுக்கு கழுவிக்கொள்ளுங்கள்.
- சாப்பாட்டுத் தட்டுகள், கிண்ணங்கள், கண்ணாடி மற்றும் தண்ணீரக் குடுவைகள் போன்றவற்றை உங்கள் மத்தியில் பகிரந்து பயன்படுத்த வேண்டாம். நீர்க்குழாய்களில் இருந்து நேரடியாக நீரை அருந்தக் கூடாது.

**அறிவுறுத்தும் முறைகள்**

- கோவிட் -19 உடன் தொடர்புடைய அனைத்து சுகாதார தகவல்களையும் ஒரு நாளைக்கு பல தடவைகள் உள்ளக ஒலிபெருக்கிகள் மூலம் ஒலிபரப்புதல் (உதாரணம்: வேலையைத் தொடங்குவதற்கு முன், உணவு இடைவேளையின் போது என்றவாறு).
- •கோவிட் -19 தடுப்பு தொடர்பான சுவரொட்டிகள், சுவர் வரைபடங்கள் மற்றும் காணொளிகள் போன்றவற்றினை நுழைவாயில், கை கழுவும் பிரதேசம், உணவருந்தும் பகுதிகள் மற்றும் பொதுவான பகுதிகளில் காட்சிப்படுத்துக.







சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம்

Dr. Anil Jasinghe
Director General of Health Services
Ministry of Health & Indigenous Medicine Services
"Suwasiripaya"
385, Rev. Baddegama Wimalawansa Thero Mawatha,
Colombo 10.

28.06.2020